
**ஜூன் – 10**

# TNPSC துளிகள்

- திருச்சிக்கு அருகிலுள்ள பச்சைமலை பகுதியைச் சேர்ந்தப் பழங்குடியின மாணவர் S. பரத், பொது சட்டக் கல்வி சேர்க்கைத் தேர்வில் (CLAT) தேர்ச்சி பெற்று திருச்சியில் உள்ள தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் சேர்க்கை பெற்ற முதல் பழங்குடியின மாணவர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- இந்தியாவின் முதல் மாறுநிலை வேகத்திலான நீரேற்றுச் சேமிப்பு ஆலை (PSP) ஆனது உத்தரகாண்டில் உள்ள டெஹ்ரியில் அதன் வணிக ரீதியான சில நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்கான காத்திருப்பு நேரம்




- தமிழ்நாட்டில் மிகவும் குறைந்த ஒரு காத்திருப்பு நேரத்தில் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப் பட்டு சாதனை படைக்கப் பட்டுள்ளது.
- இந்த மாநிலத்தின் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை காத்திருப்புப் பட்டியலில் பதிவு செய்யப் பட்ட ஒன்பது நாட்களுக்குப் பிறகு அந்த நோயாளிக்கு மிக வெற்றிகரமான உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.
- இந்தச் செயல்முறையானது, இந்திய உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை சங்கம் (iORTA) மூலம் எளிதாக்கப்பட்டது.

## குறுவை சாகுபடி பரவல் 2025

- தமிழ்நாடு அரசு ஆனது தற்போதைய குறுவை சாகுபடி பருவத்தில், டெல்டா பகுதியில் 5 லட்சம் ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவில் குறுவை சாகுபடி செய்வதற்கான உயர் இலக்கினை நிர்ணயித்துள்ளது.
- கடந்த ஆண்டு, இந்த சாகுபடி அளவு சுமார் 3.88 லட்சம் ஏக்கர்களாக இருந்தது என்ற நிலையில் இது 2023-24 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்டதை விட சுமார் 1.7 லட்சம் ஏக்கர் குறைவாகும்.
- தற்போதைய நிலைமை மிகச் சிறப்பாக இருப்பதால், ஜூன் 12 ஆம் தேதி மேட்டூர்

அணையைத் திறக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

- ❖ இந்த முறை, குறுவை சாகுபடிப் பரப்பளவில் சாதனையாக 5.6 லட்சம் ஏக்கர் வரை இருக்கலாம்.
- ❖ டெல்டா பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு 58 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் சிறப்பு குறுவை சாகுபடி உதவித்தொகை தொகுப்பைத் தொடரவும் அரசாங்கம் முடிவு செய்து உள்ளது.
- ❖ இந்தத் திட்டத்தில் இயந்திரமயமாக்கப்பட்ட நெல் நடவு, சான்றளிக்கப்பட்டத் தரமான விதைகள், உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்டச் சத்து கலவைகளுக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன.




| Crop | Area coverage 2023-2024 | 2024-25* | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | Target (L. Ha) | Area coverage (L. Ha) | Increase/ decrease over last year (ha) | % of increase/ decrease over last year | Achievement against target (in %) |
| Paddy | 20.936 | 20.2 | 21.317 | 38,154 | 1.8 | 105.5 |
| Millets | 9.554 | 9.95 | 9.777 | 22,312 | 2.3 | 98.3 |
| Pulses | 7.491 | 10 | 7.517 | 2,646 | 0.3 | 75.2 |
| Total | 37.981 | 40.15 | 38.611 | 63,112 | 1.67 | 96.3 |

# தேசியச் செய்திகள்


## UMEED மத்திய இணைய தளம்

- ❖ வக்ஃப் வாரியத்தின் அனைத்து சொத்துக்களைப் புவிசார் குறியிட்ட பிறகு எண்ணிமப் பதிவுகளை உருவாக்கும் UMEED இணைய தளத்தினை மத்திய அரசு அறிமுகப்படுத்தி உள்ளது.
- ❖ UMEED மத்திய இணைய தளமானது ஒருங்கிணைந்த வக்ஃப் மேலாண்மை, அதிகாரம் அளித்தல், செயல்திறன் மற்றும் மேம்பாட்டுச் சட்டம், 1995 என்பதன் சுருக்கமாகும்.
- ❖ இது வக்ஃப் சொத்துக்களின் நிகழ்நேர அளவிலான பதிவேற்றம், சரி பார்ப்பு மற்றும் கண்காணிப்பதற்கான மையப்படுத்தப்பட்ட எண்ணிமத் தளமாக செயல்படும்.
- ❖ மிகவும் சிறப்பான பதில் நடவடிக்கை மற்றும் வெளிப்படையான குத்தகை மற்றும் பயன்பாட்டு கண்காணிப்புக்கான இயங்கலை வழி குறை தீர்ப்பு முறையையும் இது உள்ளடக்கியுள்ளது.
- ❖ இந்த இணைய தளமானது, புவியியல் தகவல் முறைமை (GIS) வழி வரைபடமாக்கல்

மற்றும் பிற வகையான இணைய ஆளுகை கருவிகளுடனான ஒருங்கிணைப்பு மற்றும் சரிபார்க்கப்பட்ட பல்வேறு பதிவுகள் மற்றும் அறிக்கைகளுக்கான பொது அணுகலை உள்ளடக்கியது.




## கனல் வாயு கந்தக நீக்கல் கொள்கை 2025




- இந்திய நிலக்கரிப் பயன்பாட்டு ஆலைகள் இனிமேல் கனல் வாயு கந்தக நீக்க (Flue Gas Desulphurization - FGD) அமைப்புகளை நிறுவ வேண்டும் என்ற ஆணையைத் திரும்பப் பெற முதன்மை அறிவியல் ஆலோசகர் அலுவலகம் பரிந்துரைத்துள்ளது.
- சுற்றுச்சூழல் துறை அமைச்சகம் (MoEFCC) ஆனது, 2015 ஆம் ஆண்டில் இந்தியாவின் 537 நிலக்கரிப் பயன்பாட்டு ஆலைகள் அனைத்தும் சல்பர் டை ஆக்சைடு (SO2) மீதான உமிழ்வினைக் குறைக்க FGD அமைப்புகளை நிறுவ கட்டாயப்படுத்தியது.
- நிலக்கரிப் பயன்பாட்டு மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து சல்பர் டை ஆக்சைடு ($SO_2$) உமிழ்வினைக் குறைப்பதற்காக FGD அலகுகள் வடிவமைக்கப் பட்டுள்ளன.
- இந்த அலகுகள் ஆனது, அனைத்து TPPகளிலும் காற்றின் தரத்தின் மீதான தரங்களைப் பூர்த்தி செய்வதற்காக நிறுவப்பட வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டுள்ளன.
- இருப்பினும், இந்தியாவின் 600 TPPகளில் சுமார் 8% மட்டுமே இந்தத் தேவையைப் பூர்த்தி செய்துள்ளன.

- மேலும், FGD அலகுகளைக் கொண்ட சில ஆலைகளுக்கு அதன் அருகிலுள்ள நகரங்கள், அவற்றைக் கொண்டிராதவற்றுடன் ஒப்பிடச் செய்யும் போது $SO_2$ அளவுகளில் மிகவும் பெரிய அளவில் வேறுபாடுகளைக் கொண்டிருக்கவில்லை.

## SEZ விதிகள் 2025 - குறைக்கடத்தி மற்றும் மின்னணுக் கூறு உற்பத்தி

- ஜூன் 03 ஆம் தேதியன்று அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட 2025 ஆம் ஆண்டு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (திருத்தம்) மீதான விதிகள் 2025 ஆனது, உற்பத்தியாளர்களுக்கு நிறைவு செய்யப்பட்ட பொருட்களை இடம் பெயர்த்த அல்லது விற்பனை செய்வதற்கு அதிக சுயாட்சியை வழங்குகிறது.
- குறைக்கடத்திகள் மற்றும் மின்னணுக் கூறுகளின் உற்பத்தியாளர்கள் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் (SEZ) உள்ள சிறிய நிலப் பகுதிகளில் தொழிற்சாலை முதலியவற்றை அமைக்க அரசாங்கம் அனுமதித்துள்ளது.
- SEZ ஆனது, குறைக்கடத்திகள் அல்லது மின்னணுக் கூறுகளை தயாரிப்பதற்காககவும் புத்தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட நிறுவனங்களுக்காகவும் மிகவும் பிரத்யேகமாக வடிவமைக்கப் பட்டதாகும்.
- அவர்கள் தற்போது முன்னதாக இருந்த 50 ஹெக்டேர் குறைந்தபட்ச நில வரம்பிற்கு மாறாக 10 ஹெக்டேர் பரப்பில் தொழிற்சாலைகளை அமைக்க முடியும்.
- பல்துறை சிறப்புப் பொருளாதார மண்டலங்களில், குறைந்தபட்ச நிலத் தேவை 20 ஹெக்டேரில் இருந்து நான்கு ஹெக்டேராகக் குறைக்கப் பட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் சுமார் 45 பில்லியன் டாலராக மதிப்பிடப்பட்ட இந்தியாவின் குறைக் கடத்திச் சந்தையானது 2030 ஆம் ஆண்டில் 100 பில்லியன் டாலரைத் தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




## தூய்மையான தாவர திட்டம்

- புனே நகரில் நடைபெற்ற இந்தியாவின் முதல் சர்வதேச வேளாண் ஹேக்கத்தானின் போது மத்திய அரசானது 'தூய்மையான (நோய்ப் பாதிப்பற்ற) தாவரத் திட்டத்தை' அறிமுகப் படுத்தியது.
- இந்தத் திட்டம் ஆனது உயர்தர, வைரஸ் இல்லாத நடவுப் பொருட்களை அணுகுவதன் மூலம் தோட்டக்கலையில் உள்ள மிகவும் முக்கியமான பிரச்சினைகளைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது இந்தியா முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு நோய்த் தாக்கமற்ற தோட்டக்கலை தாவரங்களை வழங்கும்.

- நாடு முழுவதும் மொத்தம் 9 தூய்மையான தாவரத் திட்டங்கள் (CPC) தொடங்கப்பட உள்ளன.




## பாரதிய பாஷா அனுபாக்




- மத்திய உள்துறை அமைச்சர் புது டெல்லியில் பாரதிய பாஷா அனுபாக் (BBA/ இந்திய மொழிகள் பிரிவை) திறந்து வைத்தார்.
- இது இந்தியாவின் மொழியியல் பன்முகத் தன்மையை ஒருங்கிணைத்து, அனைத்து மொழிகளுக்கும் வலுவான மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட தளத்தினை வழங்கும்.

- இது இந்தியாவின் நிர்வாகச் செயல்பாட்டில் வெளிநாட்டு மொழிகளின், குறிப்பாக ஆங்கிலத்தின் ஆதிக்கத்தைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது அதன் முடிவெடுப்பு மீதான செயல்முறையிலும் அலுவல்வழி தகவல்தொடர்பிலும் தாய்மொழிகளைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கிறது.

## இந்தியாவின் அடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பு





- இந்தியாவானது 16 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு நடத்தப்படவுள்ள தனது மக்கள்தொகை கணக்கெடுப்பை 2027 ஆம் ஆண்டு மார்ச் 01 ஆம் தேதிக்குள் மேற் கொள்ள உள்ளது.
- மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்தியத் தலைமைப் பதிவு அலுவலகம் ஆனது மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்துகிறது.
- இது சுதந்திர இந்தியாவில் மிகவும் முதல் முறையாக சாதிகளின் கணக்கெடுப்பையும் உள்ளடக்கிய வகையிலான இந்தியாவின் முதல் எண்ணிம வகையிலான மக்கள் தொகை கணக்கெடுப்பாக இருக்கும்.
- இது வரை பட்டியலிடப்பட்ட சாதியினர் (SC) மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) ஆகிய இரண்டு பிரிவுகளின் அட்டவணைகள் மட்டுமே கணக்கிடப்பட்டுள்ளன.
- மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆனது 2027 ஆம் ஆண்டு பிப்ரவரி 28 ஆம் தேதிக்குள் இரண்டு கட்டங்களாக நடத்தப்பட உள்ளது என்பதோடு மேலும் இந்தத் தரவிற்கு 2027 ஆம் ஆண்டு மார்ச் 01 ஆம் தேதியன்று நள்ளிரவு 12 மணியானது குறிப்புத் தேதியாகக் குறிக்கப்பட்டுள்ளது.
- பிற பகுதிகளோடு ஒத்திசையாத லடாக் ஒன்றியப் பிரதேசம் மற்றும் ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசத்தின் பனிப்பொழிவு பகுதிகள் மற்றும் இமாச்சலப் பிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் போன்ற சில மாநிலங்களுக்கு, மக்கள் தொகை கணக்கெடுப்பு மீதான குறிப்புத் தேதியானது 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதி நள்ளிரவு 12 மணியாக குறிக்கப்பட்டுள்ளது.
- இதற்கு முன்னதாக 2011 ஆம் ஆண்டில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெற்றது.
- 2021 ஆம் ஆண்டில் நடைபெற திட்டமிடப்பட்ட அடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பு

ஆனது, கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக காலவரையின்றித் தாமதமானது.

- அரசியலமைப்பு ஆணையின்படி, 2026 ஆம் ஆண்டிற்குப் பிறகான முதலாவது மக்கள் தொகை கணக்கெடுப்பை வைத்து மக்களவைத் தொகுதிகளை ஒரு மறுவரையறை செய்வதற்கான அடிப்படையாகப் பயன்படுத்தலாம்.
- இந்தியாவின் மக்கள் தொகை கணக்கெடுப்பானது, மக்கள் தொகை கணக்கெடுப்புச் சட்டம் 1948 மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு விதிகள்1990 ஆகியவற்றின் கீழ் நடத்தப்படுகிறது.
- இது முதலில், வீடுகள் வாரியான ஒரு பட்டியல் மற்றும் வீட்டுவசதிப் பட்டியல்; பின்னர், மக்கள் தொகை கணக்கெடுப்பு என இரண்டு கட்டங்களாக முடிக்கப்படும்.
- இதில் தேசிய மக்கள்தொகை பதிவேட்டை (NPR) புதுப்பிப்பது குறித்து எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை.
- திட்டமிடப்பட்ட 2021 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் முதல் கட்டத்தின் போது மக்கள் தொகை பதிவேடு புதுப்பிக்கப்பட இருந்தது.
- 2003 ஆம் ஆண்டு குடியுரிமை விதிகளின் படி, NPR என்பது இந்தியக் குடிமக்களின் தேசிய பதிவேட்டை (NRIC/NRC) தொகுப்பதற்கான முதல் படி நிலையாகும்.
- தேசிய மக்கள்தொகை பதிவேடு (NPR) கடைசியாக 2015 ஆம் ஆண்டு புதுப்பிக்கப் பட்டது.
- முதல் NPR 2010 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது, பின்னர் இந்தத் தரவு 2015 ஆம் ஆண்டு வீடுகள் வாரியான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டதன் மூலம் புதுப்பிக்கப்பட்டது.
- இது 119 கோடி குடியிருப்பாளர்களின் தரவுத் தளத்தைக் கொண்டுள்ளது.

## நீதிபதி வர்மா பதவி நீக்கத் தீர்மானம்




- மத்திய அரசானது, வரவிருக்கும் கூட்டத் தொடரின் போது அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதி யஷ்வந்த் வர்மாவிற்கு எதிராக பதவி நீக்கம் குறித்த ஒரு தீர்மானத்தை முன் வைக்க உள்ளது.
- அப்போதைய இந்தியத் தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னாவால் அமைக்கப்பட்ட மூன்று

பேர் கொண்ட குழுவால் அவர் மீது சுமத்தப்பட்ட குற்றப் பத்திரிகையைத் தொடர்ந்து இந்தப் பதவி நீக்க தீர்மானம் முன் வைக்கப்பட உள்ளது.

- இந்த சர்ச்சையின் போது அவர் அலகாபாத் உயர் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டார்.
- நீதிபதி வர்மாவின் வீட்டில் பணம் கைப்பற்றப்பட்ட நிகழ்வில் தான் குற்றமற்றவர் என்று கூறிய போதிலும், அக்குழு அவர் மீது குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்தது.
- நீதிபதி வர்மா, பதவி விலக கோரப் பட்ட போதிலும் அதற்கு அவர் மறுத்துவிட்டார்.
- இது தலைமை நீதிபதியை குடியரசுத் தலைவர் மற்றும் பிரதமருக்கு அவர் மீது பதவி நீக்க நடவடிக்கை எடுக்குமாறு கடிதம் எழுதத் தூண்டியது.
- விசாரணைக் குழுவின் அறிக்கை, நீதிபதி வர்மாவைப் பதவி நீக்கம் செய்ய பரிந்துரை செய்திருந்தது என்பதோடு மத்திய சட்டத் துறை அமைச்சர் இந்த அறிக்கையின் அடிப்படையில் பதவி நீக்கத் தீர்மானத்தை முன்வைப்பார்.
- 1968 ஆம் ஆண்டு நீதிபதிகள் (விசாரணை) சட்டத்தின்படி, ஒரு நீதிபதியை பதவி நீக்கம் செய்வதற்கான தீர்மானம் எந்த அவையிலும் ஏற்றுக் கொள்ளப்படும்.
- பின்னர் சபாநாயகர் அல்லது தலைவர் பதவி நீக்கம் (Impeachment) கோரப்பட்டதற்கான காரணங்களை ஆராய மூன்று பேர் கொண்ட குழுவை அமைப்பார்.
- ஒரு பதவி நீக்கத் தீர்மானத்தினை முன் வைக்க, அந்தத் தீர்மானம் ஆனது மாநிலங்கள் அவையில் முன் வைக்கப்பட்டால் அதற்கு வேண்டி 50 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவும், மக்களவையில் முன் வைக்கப்பட்டால் 100 உறுப்பினர்களின் ஆதரவும் அவசியம் ஆகும்.
- பதவி நீக்கத் தீர்மானத்தை இரு அவைகளிலும் முன் வைக்கலாம்.
- இரு அவைகளிலும் ஒரு தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்படும் போது, நீதிபதியைப் பதவி நீக்கம் செய்வதற்கான அரசியலமைப்பு ரீதியாக வகுக்கப்பட்ட ஒரு நடைமுறைக்குப் பொதுவாக மூன்று பேர் கொண்ட குழு நிர்ணயிக்கப்படுகிறது.
- தலைமை நீதிபதி கன்னாவால் அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவானது ஏற்கனவே ஆதாரங்களை ஆராய்ந்துள்ளதால் நீதிபதி வர்மாவின் பதவி நீக்கத் தீர்மானத்திற்கு அதற்கான அவசியமிருக்காது.

## 2025 ஆம் ஆண்டு மழைக்கால கூட்டத் தொடர்

- 2025 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தின் மழைக்கால கூட்டத் தொடர் ஆனது ஜூலை 21 முதல் ஆகஸ்ட் 12 ஆம் தேதி வரை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் கிரண் ரிஜிஜு இது குறித்து ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.
- பாதுகாப்புத் துறை அமைச்சரான ராஜ்நாத் சிங் தலைமையிலான பாராளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது இந்தத் தேதிகளைப் பரிந்துரை செய்துள்ளது.
- இக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தேதிகளில் பாராளுமன்றக் கூட்டத் தொடரைக் கூட்ட வேண்டும் என்று குடியரசுத் தலைவருக்கு அது பரிந்துரை அனுப்பியிருந்தது.
- பொதுவாக பாராளுமன்றக் கூட்டத் தொடருக்கான தேதிகள் சில நாட்களுக்கு முன்பே அறிவிக்கப்படும்.
- இதுவரையில் ஒரு கூட்டத் தொடர் தொடங்குவதற்கு 47 நாட்களுக்கு முன்பு தேதிகள் அறிவிக்கப் பட்டதில்லை.
- மேலும் கடந்த 11 ஆண்டுகளில், அரசாங்கமானது பெரும்பாலும் இரண்டு முதல் மூன்று

வாரங்களுக்கு முன்பு அறிவித்து மழைக் காலக் கூட்டத் தொடரை நடத்தியுள்ளது.

- மேலும் அரசு கூட்டத் தொடர் குறித்து ஒன்றரை மாதங்களுக்கு முன்பே அறிவித்தது இதுவே முதல் முறையாகும்.




# சர்வதேசச் செய்திகள்

## பிரிக்ஸ் நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மன்றம் 2025




- 11வது பிரிக்ஸ் (BRICS) பாராளுமன்ற மன்றம் ஆனது பிரேசிலின் பிரேசிலியா நகரில் சமீபத்தில் நிறைவடைந்தது என்பதோடு இதில் பிரிக்ஸ் அமைப்பின் 10 உறுப்பினர் நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்றனர்.

- ❖ விரிவாக்கப்பட்ட இந்த BRICS மன்றத்தில் தற்போது இந்தியா, பிரேசில், ரஷ்யா, சீனா, தென்னாப்பிரிக்கா, ஈரான், ஐக்கிய அரபு அமீரகம், எகிப்து, எத்தியோப்பியா மற்றும் இந்தோனேசியா ஆகியவை அடங்கும்.
- ❖ இந்தியா இந்த மன்றத்தின் போது, அடுத்த ஆண்டு நடத்தப்பட உள்ள 12வது பிரிக்ஸ் பாராளுமன்ற மன்றத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றது.

# பொருளாதாரச் செய்திகள்

## பணவியல் கொள்கைப் புதுப்பிப்பு 2025

| Particulars | Apr-25 (%) | Jun-25 (%) | Change |
|---|---|---|---|
| Repo Rate | **6.00** | **5.50** | ⬇ |
| Standing Deposit Facility Rate (SDF) | **5.75** | **5.25** | ⬇ |
| Marginal Standing Facility Rate (MSF) | **6.25** | **5.75** | ⬇ |
| Bank Rate | **6.25** | **5.75** | ⬇ |
| Reverse Repo | 3.35 | 3.35 | ⟷ |
| Cash Reserve Ratio (CRR) | 4.00 | 3.00* | ⬇ |
| Statutory Liquidity Ratio (SLR) | 18.00 | 18.00 | ⟷ |

- ❖ இந்திய ரிசர்வ் வங்கியானது, அதன் பணவியல் கொள்கைக் குழுவின் 55வது கூட்டத்திற்குப் பிறகு அதன் சமீபத்தியப் பணவியல் கொள்கைப் புதுப்பிப்புகளை அறிவித்துள்ளது.
- ❖ கொள்கை சார் ரெப்போ விகிதம் ஆனது உடனடியாக அமலுக்கு வரும் வகையில் 50 அடிப்படைப் புள்ளிகள் (bps) குறைக்கப்பட்டு 5.50 சதவீதமாக உள்ளது.
- ❖ 2026 ஆம் நிதியாண்டிற்கான பணவீக்கக் கணிப்பு முந்தைய 4 சதவீதத்திலிருந்து 3.7 சதவீதமாக திருத்தப்பட்டுள்ளது.
- ❖ 2025-26 ஆம் ஆண்டிற்கான உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 6.5 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- ❖ 2024-25 ஆம் நிதியாண்டில், வளர்ச்சி விகிதம் 6.5 சதவீதமாக இருந்தது என்ற நிலையில் இது நான்கு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு மிகக் குறைவாகும்.
- ❖ SDF விகிதம் 5.25% ஆகவும், MSF/வங்கி விகிதம் 5.75% ஆகவும் திருத்தப்பட்டது.
- ❖ இது ரொக்க இருப்பு விகிதத்தை 1% என்ற மிகப்பெரிய அளவிற்குக் குறைக்க முடிவு செய்தது.
- ❖ இது வங்கி அமைப்பில் 2.5 லட்சம் கோடி ரூபாய்களைப் பணப் புழக்கத்தில் விட வழி

வகுக்கும்.

- நான்கு சம தவணைகளில் மேற்கொள்ளப் படும் ஒரு குறைப்பை அடுத்து, நிகர தேவை மற்றும் நேரக் கடமைகளில் இந்த ரொக்க இருப்பு விகிதமானது 3 சதவீதமாக இருக்கும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## அதிகரித்து வரும் கருங்கரிமம்

- சமீபத்திய ஒரு ஆய்வில், இமயமலையில் கார்பனின் மிக நுண்ணிய கருங்கரிம (Black carbon) துகள்களின் அளவுகள் அதிகரித்து வருவதாகக் கூறப்பட்டுள்ளது.
- கிழக்கு இமயமலையில் அதிக வெப்பமான பனி மேற்பரப்பு பதிவாகியுள்ளது அதைத் தொடர்ந்து மத்திய மற்றும் மேற்கு இமயமலையில் பதிவாகியுள்ளது.
- 2000–2009 முதல் 2020–2023 ஆம் ஆண்டு வரையில் சராசரி பனி மேற்பரப்பு வெப்பநிலை ஆனது -11.27 டிகிரி செல்சியசிலிருந்து -7.13°C ஆக அதிகரித்துள்ளது.
- கருங்கரிமம் ஆனது பொதுவாக சூரிய ஒளியைச் உறிஞ்சுகிறது என்பதோடு அது மேற் பரப்பில் படிந்தால் அந்தப் பரப்பினை வெப்பமாக்கும்.
- கருங்கரிமத்தின் முக்கிய உற்பத்திக் காரணிகளில் உயிரிப் பொருட்கள் எரிப்பு, புதை படிவ எரிபொருள் பயன்பாடு மற்றும் குறிப்பாக இதன் உமிழ்வுகளுக்கான முக்கியப் பகுதியாகச் செயல்படுகின்ற இந்திய-கங்கைச் சமவெளியில் மேற்கொள்ளப்படும் ஒரு திறந்த வெளி எரிப்பு ஆகியவை அடங்கும்.


* When black carbon, or soot, lands on snow and ice, it dramatically speeds up melting. Dark snow and ice, by absorbing more energy, melts far faster than heat-reflecting white snow, creating a vicious circle of faster warming.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## UNESCO GEM அறிக்கை 2024–25

- யுனெஸ்கோ அமைப்பானது உலகளாவியக் கல்வி கண்காணிப்பு (GEM) அறிக்கை 2024-25 ஆனது பாலின ஏற்றத்தாழ்வுகள் குறித்த மிக கடுமையான கவலைகளை எழுப்பி உள்ளது.
- வாசிப்புத் திறனில், குறிப்பாக நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில், ஆண்கள் பெண்களை விட தொடர்ந்து பின்தங்கி வருகின்றனர்.

- ஒவ்வொரு 100 பெண்களுக்கு 87 ஆண்கள் மட்டுமே குறைந்தபட்சத் திறன் நிலையை அடைகிறார்கள்.
- நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் இந்த இடைவெளி இன்னும் மிக அதிகமாக உள்ளது என்பதோடு அங்குள்ள 100 பெண்களுக்கு 72 ஆண்கள் மட்டுமே வாசிப்புத் தரத்தைப் பூர்த்தி செய்துள்ளனர்.
- கோவிட் பெருந்தொற்றிற்குப் பிறகு, பிரேசில், சிலி, இங்கிலாந்து, இத்தாலி மற்றும் நியூசிலாந்து போன்ற நாடுகளில் உள்ள பெண்களில் ஆண்களுடன் ஒப்பிடும் போது செயல்திறனில் குறிப்பிடத்தக்கப் பின்னடைவு பதிவாகியுள்ளது.
- இந்தியாவில் 2021 ஆம் ஆண்டில் சுமார் 189 தேசிய நிறுவனங்களில் துணைவேந்தர்கள் அல்லது இயக்குநர்கள் போன்ற உயர்பதவிகளை 5% பெண்கள் மட்டுமே வகித்தனர்.
- உலகளவில் சுமார் 63 சதவீத நாடுகளில் மட்டுமே திறந்த (அனைவருக்குமான) மற்றும் போட்டித் தன்மை வாய்ந்த பள்ளித் தலைவர் ஆட்சேர்ப்பு செயல்முறைகள் உள்ளன.





# மாநிலச் செய்திகள்

## உதாம்பூர்-ஸ்ரீநகர்-பாராமுல்லா இரயில் இணைப்பு

- பிரதமர் காஷ்மீரில் உதாம்பூர்-ஸ்ரீநகர்-பாராமுல்லா இரயில் சேவை இணைப்பைத் தொடங்கி வைத்தார்.
- இது இந்த காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதியை நாட்டின் பிற பகுதிகளுடன் இணைக்கும் 272 கிலோ மீட்டர் நீள இரயில் சேவைத் திட்டமாகும்.
- 1884 ஆம் ஆண்டில், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் மகாராஜா பிரதாப் சிங் இந்தத் திட்டத்தினைத் தனது பிரதமர் திவான் அனந்த் ராமிடம் முன்மொழிந்தார்.
- முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி 1983 ஆம் ஆண்டு ஜம்மு-உதாம்பூர்-ஸ்ரீநகர் இரயில் பாதைக்கு அடிக்கல் நாட்டினார்.

- இது 2002 ஆம் ஆண்டு ஒரு தேசிய திட்டமாக அறிவிக்கப்பட்டது.
- 119 கிலோ மீட்டர் நீளமுள்ள பாராமுல்லா-ஸ்ரீநகர்-அனந்த்நாக்-காசிகுண்ட் பிரிவு 2009 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப் பட்டுச் செயல்பாட்டுக்கு வந்தது.




## லடாக் நில மற்றும் வேலைவாய்ப்பு விதிமுறைகள் 2025




- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள், 2025 ஆம் ஆண்டு லடாக் ஒன்றியப் பிரதேச இட ஒதுக்கீட்டு (திருத்தம்) விதிமுறைகளை அறிவித்தார்.
- இது 2004 ஆம் ஆண்டு ஜம்மு மற்றும் காஷ்மீர் இடஒதுக்கீட்டுச் சட்டத்தில் லடாக்கிற்கு ஏற்றவாறான திருத்தங்களை மேற்கொள்கிறது.
- பொருளாதார ரீதியாக பின்தங்கியப் பிரிவினருக்கான (EWS) இட ஒதுக்கீட்டைத் தவிர, எந்த வகையிலும் இடஒதுக்கீட்டின் 85% என்ற மொத்த சதவீதத்தினை விட அதிகமாக இருக்கக் கூடாது.

- அரசு வேலைகளுக்கான மொத்த இட ஒதுக்கீடு இந்த ஒன்றியப் பிரதேசத்தில் தற்போது 95% ஆக உள்ளது என்பதோடு இது நாட்டின் மிக உயர்ந்த இட ஒதுக்கீட்டு அளவில் ஒன்று ஆகும்.
- மேகாலயா மாநிலத்தில் பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர்களுக்கு (SCs/STs) 85% இடஒதுக்கீடும், அருணாச்சலப் பிரதேச மாநிலத்தில் பட்டியலிடப் பட்ட பழங்குடியினருக்கு 80% இட ஒதுக்கீடும் உள்ளது.
- மேலும் பின்வரும் மூன்று விதிமுறைகளும் குடியரசுத் தலைவரால் அறிவிக்கப்பட்டன:
    - லடாக் அதிகாரப்பூர்வ மொழிகளுக்கான விதிமுறைகள், 2025;
    - லடாக் குடிமைப் பணிகள் அதிகாரப் பரவலாக்கம் மற்றும் ஆட்சேர்ப்பு (திருத்தம்) விதிமுறைகள், 2025; மற்றும்
    - லடாக் தன்னாட்சி மலை மேம்பாட்டு ஆணைய (திருத்தம்) விதிமுறைகள், 2025.
- "ஆங்கிலம், இந்தி, உருது, போதி மற்றும் புர்கி" ஆகியவை லடாக்கின் அதிகாரப்பூர்வ மொழிகளாக இருக்கும்.
- லடாக்கின் பிற தாய்மொழிகளான ஷினா (டார்டிக்), ப்ரோக்ஸ்காட் (டார்டிக்), பால்டி மற்றும் லடாக்கி ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் சில சிறப்பு முயற்சிகள் எடுக்கப்படும்.
- மத்திய அரசு அதிகாரிகளின் குழந்தைகள் உட்பட பிற குடியிருப்பாளர்களும் இங்கு "குடியிருப்போர்" என்று கருதப்பட வேண்டும்.
- மத்திய உள்துறை அமைச்சகத்தினால் அறிவிக்கப்பட்ட படி அதன் விதிகள் அரசாங்க வேலைகளுக்கு விண்ணப்பிக்க "குடியிருப்போர்" எனும் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற அளவுருக்களைக் குறிப்பிட்டன.
- ஆனால் அவர்கள் லடாக் பகுதி ஒன்றியப் பிரதேச அந்தஸ்து பெற்ற நாளான 2019 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் தேதி முதல் அந்த ஒன்றியப் பிரதேசத்தில் 15 ஆண்டுகள் தொடர்ந்து வசிப்பதை உறுதி செய்ய வேண்டும்.
- முதன்முதலில், மலைப் பாங்கானப் பகுதிகளுக்கான சபைகளில் மூன்றில் ஒரு பங்கு இடங்கள் பெண்களுக்குச் சுழற்சி அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளன.
- இந்த விதிமுறைகள் என்பது 1997 ஆம் ஆண்டு லடாக் தன்னாட்சி மலை மேம்பாட்டு ஆணையச் சட்டத்தினை திருத்த உள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் ஆரம்ப கால வெற்றிக் கொண்டாட்டங்களுக்குப் பிறகு, 2020 ஆம் ஆண்டில் நான்கு முக்கிய குறிப்பிட்ட கோரிக்கைகளுடன் போராட்டங்கள் லடாக்கில் தொடங்கின:
    - லடாக்கிற்கு மாநில அந்தஸ்து,
    - லடாக்கை அரசியலமைப்பின் ஆறாவது அட்டவணையில் சேர்ப்பதன் மூலம் அதற்குப் பழங்குடியின பகுதி அந்தஸ்து வழங்குதல்,
    - உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பிற்கான இட ஒதுக்கீடு, மற்றும்
    - லே மற்றும் கார்கிலுக்கு தலா ஒரு பாராளுமன்ற இட ஒதுக்கீடு.

# விளையாட்டுச் செய்திகள்

## மேக்னஸ் கார்ல்சன் - நார்வே செஸ் போட்டி 2025

- கார்ல்சன் தனது தொழில்முறை வாழ்க்கையில் ஏழாவது முறையாக நார்வே செஸ் பட்டத்தை வென்றார்.

- இந்தப் போட்டியின் போது, குகேஷ் மேக்னஸ் கார்ல்சனை வீழ்த்தி, உலகின் முன்னணி சதுரங்க வீரருக்கு எதிரான தனது முதல் வரலாற்று சிறப்புமிக்க வெற்றியைப் பதிவு செய்தார்.
- வரலாற்றில் முதல் முறையாக, நான்கு இந்தியர்கள் இப்போட்டியின் இறுதியில் முதல் 10 இடங்களுக்கான சதுரங்கத் தர வரிசையில் இடம் பெற்றனர்.
- D. குகேஷ் (5வது), அர்ஜுன் எரிகைசி (4வது), R. பிரக்ஞானந்தா (6வது) மற்றும் அரவிந்த் சிதம்பரம் (9வது) ஆகியோர் இதில் முன்னேறியுள்ளனர்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★